ෆැක්ස් අංකය
தொலைநகல் } 2323730
Fax No.

ඊ-මේල්
மின்னஞ்சல் } cabsecsl@sltnet.lk
E-mail

වෙබ් අඩවිය
வெப் தளம் } www.CabinetOffice.gov.lk
Web Site

# අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය
# அமைச்சரவை அலுவலகம்
# OFFICE OF THE CABINET OF MINISTERS

ජනරජ චතුරශ්‍රය, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
குடியரசுச் சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
Republic Square, Sir Baron Jayathilaka Mawatha, Colombo 01.

මගේ අංකය
எனது இல. } CA/M/Sub/Co/E/1(v)
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

**அவசரமானதும் முக்கியமானதும்**

2010 மே மாதம் 02 ஆம் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்.

**அமைச்சுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உசாத்துணைவர்களினதும் / ஆலோசகர்களினதும் நியமனங்கள் செயல்வலுவில் உள்ள காலத்தை மட்டுப்படுத்தல்.**

அமைச்சுக்களின் கீழ் அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் மாண்புமிகு அமைச்சர்களினாலும், இயைபுள்ள அமைச்சுக்களினாலும் வேண்டப்படும் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் உசாத்துணைவர்கள்/ ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

02. 2010 சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதுடனும், 2010 பாராளுமன்றத் தேர்தல் நடாத்தி கருதப்பட்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டதுடனும் 2010 சனவரி மாதத்திலிருந்து செய்யப்பட்ட அத்தகைய நியமனங்கள், 2010 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், 2010 சனவரி மாதத்திற்கு முன்னர் உசாத்துணைவர்களின் / ஆலோசகர்களின் நியமனங்கள் இந்தக் கால எல்லைக்கு அப்பாலும் செயல்வலுவில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

03. தற்போது, ஒரு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சுக்களின் எண்ணிக்கையும்கூட மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக புதிய அமைச்சுக்களுக்கு குறித்தொதுக்கப்படவுள்ள விடயங்களும் பணிகளும் சார்பில் உசாத்துணைவர்களை / ஆலோசகர்களை நியமிக்கும் தேவை, புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்களினால் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில் தற்போது அமைச்சுக்களில் பணியாற்றுகின்ற உசாத்துணைவர்களின் / ஆலோசகர்களின் சேவையை 2010 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னர் தேவைப்படமாட்டாதென்பதே அதிமேதகைய சனாதிபதியின் கருத்தாகவுள்ளது.

04. இந்நிலையில் உங்களுடைய அமைச்சின் கீழ், 2010 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு அப்பாலும் தொடர்ந்த நிலையில் இருக்கும் உசாத்தணைவர்களின் / ஆலோசகர்களின் சேவைகளை இயைபுள்ள நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இயைபாகச் செயலாற்றி, குறித்த திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரும் விதத்தில் முடிவுக்குக் கொண்டுவருமாறு நீங்கள் கோரப்படுகின்றீர்கள். அனுவதிப்பு அடிப்படையில் உசாத்தணைவர்களாக / ஆலோசகர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களை 2010 மே மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அவர்களை முன்னைய இயைபுள்ள நிறுவனங்களுக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன அடிப்படையின் மீது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள உசாத்தணைவர்களின் / ஆலோசகர்களின் நிரலொன்றை 2010 மே மாதம் 07 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு மின்னஞ்சல் மூலம் (மின்னஞ்சல் இல. 2323730) எனக்கு அனுப்பி வைக்குமாறும் தயவாய் அறியத்தருகின்றேன்.

05. மின்னஞ்சல் மூலம் ஆங்கில மொழியில் அனுப்பப்பட்டதும் 2010 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியிடப்பட்டதுமான எனது கடிதத்திற்குப் பதிலாக இந்தக் கடிதத்தைப் பதிலீடு செய்யுமாறு தயவைக் கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ்.அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

பிரதிகள் :
- சனாதிபதியின் செயலாளர்
- பிரதம அமைச்சரின் செயலாளர்
- திறைசேரியின் செயலாளர்
- கணக்காய்வாளர் நாயகம்